**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 69/2022**

பி.வா.சா.2 – முனியம்மாள் 03.03.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை** :-

பிரதிவாதி ராக்கு எனது உடன்பிறந்த மூத்த சகோதரி ஆவார். தாவா சொத்து பிரதிவாதிக்கு எனது அப்பா எழுதிக் கொடுத்தது ஆகும். எனது அப்பாவிற்கு தாவா சொத்து அவரது அப்பாவிடமிருந்து கிடைத்தது. தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் எனக்கும் அதில் பங்கு உள்ளது என்றால் எனது அப்பா மனப்பூர்வமாக பிரதிவாதிக்கு அந்த சொத்தை எழுதிக் கொடுத்துள்ளார். எனது அப்பாவிற்கு என்னையும் சேர்த்து மொத்தம் 4 பிள்ளைகள் அவர்கள் நான், தவமணி, ராஜா, ராக்கு ஆவோம். தாவா சொத்து பூர்வீக சொத்து என்பதால் மேற்படி தவமணி மற்றும் ராஜாவிற்கு அதில் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அப்பாவின் மற்ற பிள்ளைகளுக்கும் பங்கு உள்ளது என்பதால் அவர்களையும் இந்த வழக்கில் சேர்த்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனது தாத்தா பெயர் பெரியாம்பிள்ளை. பெரியாம்பிள்ளையின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. பெரியாம்பிள்ளையின் உடன்பிறந்தவர்கள் 3 பேர் அவர்கள் பெயர் வீரணன் அம்பலம், சின்னன் அம்பலம். வீரணன் அம்பலத்திற்கு நாச்சி, கருப்பணன், முனிச்சாமி ஆகியோர் வாரிசுகள். சின்னன் அம்பலத்திற்கு நாச்சம்மை மூத்த மனைவி இளைய மனைவி பெயர் அய்யம்மாள். சின்னன் அம்பலத்தின் முதல் மனைவி நாச்சம்மைக்கு வாரிசுகள் இல்லை. அந்த நாச்சம்மை சொத்தை வாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சும்மா எழுதி வாங்கியுள்ளார். நாச்சி என்பது எங்கள் குடும்பத்தில் ஆண்கள் பெயர்

நாச்சம்மை என்பது பெண்கள் பெயர். பெயர் ஒற்றுமையை வைத்துக்கொண்டு பிரதிவாதி சொல்லிக்கொடுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை